The disciplined behaviour of the pupils and their willingness to learn was conducive to teaching and learning. Irritants, such as late coming, unfinished assignments and disturbances from the environment were absent, hence teaching was effective. It was a tradition to start the day with a prayer in the classroom under the supervision of the class teacher. I still have fond memories of the experience of listening to the devotional recital of SIVA PURANAM on Fridays by over a thousand tender hearts. This unique experience profoundly influenced my personality and I gained moral courage and strength to discharge my responsibility to the fullest.

Furthermore, the Hindu cultural environment was enriched by the presence of the PILLAYAR Temple within the boundaries of the school. As time went on, the temple became the focal point to celebrate Navarathiri, Sivarathiri and other religious observances. Navarathiri was celebrated in all its glory. Pooja, pirashatham and cultural events were part of the nine day activities. VIJAYATHASAMY the last day of the festival was celebrated with pooja and pirashatham prepared by teachers and students within the temple premises. Pirashatam was enjoyed by all students and teachers. Hostellers and the teachers, who lived close by, kept up the Hindu discipline of prayer in the temple environment and children had the opportunity to learn this tradition and practise them.

Many associations were formed to help the students develop their leadership skills; and my involvement was with the advanced level union and the science union. These associations gave a forum for the students to express themselves and learn leadership firsthand. An important function of these organizations was, organizing fieldtrips, excursion to historical and other places of educational and tourist interests. A memorable trip organized by the science association was an all Island tour for a period of one week to places of historical, geographical, industrial and scenic locations. Other memorable events which students and teachers look forward to were the Advanced Level dinner and G.C.E Ordinary level



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

social. The advanced level dinner created an atmosphere of excitement for the girls and they would spend many days on planning their attire and hairdo for the formal dinner. This formal dinner had a touch of western style in its executions and the children were given an opportunity to familiarise themselves with the proper use of cutlery.

The premier Hindu institution- Hindu Ladies College owes its fame and glory to the philanthropic mindset of Sivgurunathanr's family, the dedicated service of the Jaffna Hindu Board and other well meaning citizens of Jaffna. On this foundation, brilliant administrators, professional teachers and highly motivated students contributed their share to the sustained growth of this college. I had the opportunity to work with two dedicated principals who presided over its destiny namely Mrs. V. Arumugam and Miss. P. Ramanathan. I still cherish the relationship.

Many of our old girls who are scattered in many countries are excelling in their chosen profession, bringing in fame and fortune to themselves and to their Alma Matter. In this context, I wish to write about my family physician Dr. Yaso Tharmaratnam, whom I had the pleasure of teaching. She was a polite, conscientious, and caring student. In spite of the demands of her profession, she still maintains those exemplary qualities which have helped her to win the hearts of many in our community.

Speaking about old girls, I wish to write about a conscientious and motivated ardent well-wisher Miss. Nallammah Kulanthaivelu, old girl and teacher at J.H.L.C. She along with some old girls of the college was instrumental in inaugurating the Hindu Ladies College Old Girls Organization in Canada on October 1st, 1991. This forum brought together old girls and teachers of J.H.L.C to meet and socialize. In 2000, 2003 and 2010 kalaivizha bearing the name "SAKTHI" was organized to collect much needed funds for the school. These funds enabled the Old Girls Association to provide a photocopy machine, hundred and fifty chairs, salary for the priest of the school temple (money in fixed deposit), a fully equipped computer lab and help the tsunami victims through "MANITHANEYAM". Apart from collecting funds, dinner nights afforded an opportunity to cultivate cordial relationship and strengthen the bond between old girls, teachers and well wishers. The 2016 SAKTHI kalaivizha is organized to celebrate the 25th anniversary of the inauguration of the association in Canada. The Toronto O.G.A along with other O.G.A's hope to raise funds to help the school to build a three storey building with fifteen classrooms.

Whilst writing this article I have been reliving the memorable years I spent at Hindu Ladies College, which brings back HAPPY and BEAUTIFUL memories and remind me of the college motto "IT OUGHT TO BE BEAUTIFUL, I LIVE HERE". In conclusion, my heartiest wishes for a productive and bright future to the O.G.A and the Jaffna Hindu Ladies College.

**Mrs. P. Pararajasingam**

**Retired Teacher**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பேணுவோம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறி மனிதப் பிறவியினது மாண்பினைச் செந்தமிழ்ப் பாவால் எடுத்து மொழிகிறார் ஔவைப்பாட்டியார். சமூகம் மனித நேயத்தை வளர்த்தெடுப்பதில் விழிப்புணர்வுடையதாக இருக்க வேண்டியது அவசியமானது. முதுமையையும் முதியோரையும் கனம் பண்ணுதல் இளையோருக்கு அழகு. கனடாவிற்குப் புலம் பெயர்ந்து வந்து குடியேறியோரே இக்கால கனேடிய முதியோர் வரிசையில் வைத்தெண்ணப் படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் அகதிகளாகக் குடியேறி பின்னர் கனடியப் பிரஜைகளாக அங்கீகரிக்கப்பட்டவர்களும், பிள்ளைகள் ஸ்பொன்சர் செய்து அழைத்துக் கனடாவுக்கு வந்தவர்களும் ஆவர். நம் நாட்டில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று அரச நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றியவர்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், வியாபாரம், விவசாயத்தில் ஈடுபட்ட தொழில் அதிபர்களும் சாதாரண கூலி வேலை செய்து வாழ்க்கையை நடாத்தியவர்களும் இவர்களுள் அடங்குவர். இங்கு வந்த பின்னர் தம் கல்வியை மேம்படுத்தி பல் வேறு துறைகளில் உயர் பணிகளை ஆற்றியவர்களும், சிலர் பிள்ளைகளின் முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டு தம்மை மேம்படுத்துவதைப் பின் தள்ளித் தம்மால் முடிந்த, தமக்குக்கிடைத்த வேலைகளைச் செய்தோரும் இம் முதியோரில் சேருவர். இவர்களுடன் இந்நாட்டில் தொழில் புரியாத தொழிலுக்கே போகாத முதியோர்களும் இடம்பெறுவர். ஆனாலும் தாயகத்தில் தமக்கே உரிய பொறுப்புக்களையும் சமூகப்பணிகளையும் திறம்பட ஆற்றியவர்கள். இவர்கள் தாம் வளர்த்தெடுத்த தலைமுறையிடம் தமது இருப்பைக் கையளித்துவிட்டு ஓய்வு நிலையை அடைந்தவர்கள்.

யாராக இருந்தாலும் தன் செல்வம், தன்குடும்பம், தன் கௌரவம், தன் ஓய்வூதியம் என்ற நிலைப்பாடுகளுக்கு அப்பால் தங்கள் பிள்ளைகளின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி ஒடுங்கியும், முதியோர் இல்லங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இம்முதியவர்களிடம் பிள்ளைகள் அன்பாகவும் பண்பாகவும் கலந்துரையாடவும் அவர்களின் தேவைகளை அறிந்தும், அவர்களின் உள்ளக்கிடக்கையை அறிந்தும் உரியனவற்றை செய்ய வேண்டிய கடமையையுடையவர்கள். வேலைப்பழு, தம்பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் கவனம், பல வகுப்புகளுக்கு அழைத்துச் செல்லவேண்டிய கடமை, வீட்டுக்கடன், காருக்கான கடனும் காப்புறுதித் தொகையும், மாதாந்தம் கட்டவேண்டிய பல செலவினங்கள் இவ்வாறு பாரிய பொறுப்புக்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதனால் தாய்தந்தையரிடத்தில் பணத்தையும், சரீர உதவிகளையும் எதிர்பார்க்கும் பண்பு மேலோங்கி உள்ளதேயொழிய அவர்களின் தேவைகளை உணர்ந்து, அறிந்து அதை நிறைவேற்றும் பண்பு மிகவும் அருகி வருவதைப் பலரிடம் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. தமது மனஅழுத்தத்தினாலும், நீண்ட கால நிரந்தர வேலைவாய்ப்பின்மையினாலும், சிலர் தமது வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்பின்மையினாலும் பெற்றோரைப் பராமரிக்க முடியாது அவமதிப்பவர்களையும் நம் சமூகத்தில் காணக்கூடியதாயுள்ளமை மனவேதனையாக உள்ளது. அதே சமயத்தில் தம் பிள்ளைகளுடன் ஒத்துழைக்கத் தவறுவதையும், பிள்ளைகள் இளமையாக இருக்கும்போது தம் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதனால் இன்றும் தாம் தலைமைத்துவம் செலுத்தினால் என்ன என நினைக்கும் பெற்றோர்களும் இல்லாமல் இல்லை. இவற்றிற்கு எல்லாம் அரசு வழங்கும் முதியோர் ஓய்வூதியப் பணமும் மறைமுகக் காரணமாகிறதெனலாம். நமது நாட்டில் ஓய்வூதியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனாலும் சேமிப்பினாலும், சொந்த நிலபுலங்களினாலும் கன கச்சிதமாகத் தங்கள் வாழ்க்கையை நடத்தியவர்கள் எம்முதியோர். தம் பிள்ளைகளுக்கு ரொக்கத்தையும், இனாமையும், வீட்டையும், நிலபுலங்களையும், நகைநட்டுக்களையும் சீதனமாகக் கொடுத்து வாழவைத்தவர்கள் என்பதையும் மறந்துவிட முடியாது. முதுமை நிச்சயமானது, நிகழ்தகவுடையதுமாகும், முதுமையில் பல்வேறு நோய்களின் தாக்கங்களினால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்துவதையும், உணவுக் கட்டுப்பாடுகளைக் கடைப் பிடிக்க வேண்டியதன் அவசியம், பசியின் கோரத் தாக்குதல், மருந்துகளை உரிய நேரத்தில் அருந்த வேண்டியமை, முதியோர் தங்கள் தங்கள் செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தும் மனப்பக்குவம் இருப்பதனால் முதியோர்களுக்கும் அவர் தம் பிள்ளைகளுக்கும் இடையில் மனக்கசப்பும், மனச்சலிப்பும் ஏற்படச் சந்தர்பம் அமைவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. அத்திவாரம் அழகாக இருப்பதில்லை. அதற்கு எவரும் பூச்சுப் பூசி அழகு பார்ப்பதுமில்லை. ஆனாலும் அதற்குத் தாராளமாகத் தண்ணீர் ஊற்றி, காற்று, மழை, வெயில் படுவதற்கென்றே சில மாதங்கள் விடுவார்கள். அழகாக இருக்க வேண்டுமென்பதற்காகவல்ல, உறுதியாக இருக்க வேண்டுமென்பதற்காகவே. அதற்கு மேலெழும் கட்டடங்களைத் தாங்கிப் பலமாக வைத்திருக்கவும், அவை நீண்ட காலப்பயனை உடையதாக இருப்பதற்குமே அத்திவாரம் உறுதிப்படுத்தப்படுகிறது. முதுகெலும்பு உறுதியாக இருக்கும் வரை தான் எம்மால் ஆரோக்கியமாக வாழமுடியும். தமது பிள்ளைகளின் வியத்தகு வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் கொள்ளும் முதுகெலும்பு போன்ற எமது முதிய பெற்றோரையும் இயலும்வரை பேணிப் பாதுகாப்போமாக. வெள்ளி விழாக் காணும் கனடா இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம் நடாத்தும் கலைவிழா சிறப்புற நடைபெறவேண்டும் என நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்துகின்றேன்.

**திருமதி நீலா நகுலேசபிள்ளை**
முன்னாள் ஆசிரியர்
வெள்ளிவிழா மலராசிரியர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரியும் நானும்
# -நீங்கா நினைவுகள்-

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் நீங்காத நினைவுகளாய் வேரூன்றி நிற்பது மாணவப்பருவமே. இந்த மாணவப் பருவமானது வரவில்லாமல் செலவுகள் செய்து மகிழ்ந்த காலம் என்றும் பெற்றோர்களிடமும் ஆசிரியைகளிடமும் பேச்சுப் பேச்சாய் வாங்கினாலும் அதைக் காதில் வாங்காமல் திரிந்த காலம் என்றும் குறிப்பிடலாம். ஆரம்பக் கல்வியை யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் தொடங்கி தரம் நான்கில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கால் பதித்து பல்கலைக்கழகம் சென்றது வரையான ஏறத்தாழ பத்து வருடங்களை எனது வாழ்க்கையின் வசந்தகாலம் எனலாம்.

பாடசாலை நாட்கள் என்றதும் முதல் நினைவுக்கு வருவது இல்லங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிதான். விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சி கடைசிப் பாடவேளையுடன் பாடசாலை முடிந்த பின் அரை மணித்தியாலம் நடைபெறும். புத்தகங்களை மூடி வைத்துவிட்டு எனது இல்ல ஆசிரியர்கள், இல்லப் பொறுப்பு அக்காமார் கண்களில் படாமல் விளையாட்டே வராத என்னைப் போன்ற சிலர் ஒன்று சேர்ந்து எமக்கு தெரிந்த எட்டுக்கோடு, கிளித்தட்டு விளையாடுவதும் அவர்கள் யாராவது வந்தால் ஒளித்து ஓடுவதும் அவர்கள் எங்களைத் துரத்துவதும் இன்று நினைத்தாலும் சிரிப்பாக உள்ளது. ஆனால் உயர் வகுப்புக்கு வந்ததும் பொறுப்பு வாய்ந்த அக்காவாக சிறியவர்களை எல்லாம் கலைத்துப் பிடித்து போட்டிகளில் விளையாட வைத்து ஆசிரியர்களிடம் நல்ல பெயர் வாங்கியதுடன் ரதி இல்லத்தின் வெற்றிக்காக பாடுபட்ட அந்த நாட்களை நினைத்தாலே இனிக்கிறது. நான் சிறு வயதாக இருந்த காலத்தில் விளையாட்டுப் போட்டி முடிவடைந்த பின் சுற்றுலா செல்வது வழக்கமாக இருந்தது. யாழ் கோட்டை, பண்ணைக்கடல், காரைநகர் கடற்கரை, சீமெந்துத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை என ஒவ்வொரு வருடமும் இந்த இடங்கள்தான். ஆனால் தோழிகளுடன் சேர்ந்து பொழுதுபோக்குவது பெரிய சந்தோசம். ஒரு வருடம் மட்டும் சுற்றுலாவுக்கு பதில் அழகுராணிப் போட்டி நடைபெற்றதாக ஞாபகம். நாம் உயர்வகுப்பில் கற்கும் போது சுற்றுலா நிறுத்தப்பட்டுவிட்டது. நாட்டுப்பிரச்சனை காரணமாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

அடுத்து நாம் எதிர்பார்த்துக் காத்திருப்பது நவராத்திரி விழா. எமது பாடசாலையில் நவராத்திரி விழா வெகு சிறப்பாக எமது நடுத்தோட்ட பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும். வகுப்புப்பூசை, விஜயதசமி இரண்டு நாளும் எமக்கு பெருங் கொண்டாட்டம்தான். விஜயதசமியன்று ஆசிரியர்கள் கோயிலுக்கு முன்பாக உள்ள வில்வமரத்தின் கீழ் இருந்து பொங்கல், வடை, மோதகம் செய்வதும், அவர்களுக்கு நாம் உதவி செய்வதும், கோவிலுக்கு மாவிலைத் தோரணம் கட்டி கோலம் போட்டு அலங்கரிப்பதும் மறக்கமுடியாத நாட்கள்.

கலைப்பிரிவைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவிகள் சேலை அணிந்து செல்வது அப்போது வழக்கமாக இருந்தது. எமது வகுப்பு மாணவிகள்தான் கடைசியாக சேலையில் சென்றவர்கள். எமக்கு அடுத்த வருடத்திலிருந்து சாதாரண சீருடைதான். ஒரு வருடம் பிந்திப் படித்தோமில்லை என்று அப்போது நினைத்ததுண்டு. அத்துடன் முதன்முதல் உயர்தரத்தில் இரு பிரிவுகள் காணப்பட்டதும் நான் கற்ற வருடமே. அந்த வருடம்தான் பல்கலைக்கழகத்துக்கு கலைப்பிரிவில் மட்டும் ஏழு மாணவிகள் அனுமதி பெற்றது குறிப்பிடத்தக்கது. உபஅதிபராக இருந்த செல்வி இராமநாதன் அதிபராகப் பொறுப்பேற்றதும் உயர்தர வகுப்பு மாணவிகளில் கொண்ட அக்கறையின் காரணமாகவே இம்மாற்றங்கள் நிகழ்ந்ததென்றால் மிகையாகாது.

எமது ஆசிரியைகள் எல்லோரும் கல்வி கற்பிப்பதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. மாணவர்களின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் அக்கறை கொண்டு அவர்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவர்கள். "இந்த ஆசிரியர்களே பல்கலைக் கழகத்திலும் விரிவுரையாளர்களாக இருந்திருந்தால் எனது மகள் முதல் வகுப்பில் சித்தியடைந்திருப்பாள்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அம்மா கூறுவார். இது கல்வியில் இருந்த ஆர்வமல்ல ஆசிரியர்களில் இருந்த பயமும் மரியாதையும் ஆகும். சிலசமயம் இவர்கள் என்ன ஆசிரியர்களா அல்லது ஆமிக் கொமாண்டர்களா என மனதுக்குள் திட்டியதும் உண்டு. ஆனால் பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பின்னர் தான் அவர்களின் அருமை புரிந்தது. நானும் கொ/தெகிவளை தமிழ் வித்தியாலயத்தில் பதினேழு வருடங்கள் ஆசிரியையாகவும் உப அதிபராகவும் கடமையாற்றியுள்ளேன். நான் ஆசிரியையான பின்தான் அத்தொழிலின் மகத்துவம் புரிந்தது. ஒரு மாணவருக்கு சாதாரணதர அல்லது உயர்தர பெறுபேறு வெளியாகும் நாளில் ஏற்படுகின்ற பயம் ஒரு தரமோ அல்லது இரண்டு தரமோதான். ஆனால் பொறுப்பு வாய்ந்த மாணவர் நலனில் அக்கறை கொண்ட ஒரு ஆசிரியைக்கு அவர் சேவைக்காலத்தில் இருக்கும் வரை பயமும் அக்கறையும் இருக்கும். ஆசிரியைத் தொழிலில் எனக்குக் கிடைத்த அனுபவம் இது.

எனக்குப் பொதுவாக எல்லா ஆசிரியைகளையும் பிடிக்கும். அதிலும் குறிப்பாக தமிழ் ஆசிரியை திருமதி நாகரட்ணம் என்றால் அதிகமாகவே பிடிக்கும். அவர் எங்களைப் பேசும் அழகே அழகு. ஒருநாள் பாடவேளையில் “ஒரு பிள்ளை எழும்பி வாசி” என கூறினார். ஒருவரும் எழுந்திருக்கவில்லை. அவர் இரண்டு மூன்று தரம் கூறிப்பார்த்தார். கடைசியாக “ஒரு நாய் எழும்பு” என்றார். இனியும் பேச்சு வாங்க வேண்டாம் என நினைத்து நான் எழுந்து நின்றேன். என்னை ஒரு தடவை ஏற இறங்க பார்த்து “நீ என்ன நாயா? நான் நாயைத்தானே எழும்பச் சொன்னனான்” என்றார். இன்னொரு நாள் “கலியாணம் கட்டுற வயதில உங்களுக்கு எல்லாம் ஏன் இந்தப் படிப்பு போய் எங்கயண்டாலும் கலியாணத்தைக் கட்டிக் கொண்டு நல்லாய் இருங்கோ என்னை விட்டுவிடுங்கோ” என்றார். அதற்கு ஒரு மாணவி பக்கத்தில் இருந்த மாணவியிடம் “நாங்கள் என்ன கல்யாணம் கட்டமாட்டம் என்றா சொல்லுறம் அப்பா அம்மா யோசிக்கினம் இல்லை நாங்கள் என்ன செய்வது அது இவவுக்கு புரியவில்லை” என்று கூறினார். அது மிஸ்சுக்கு கேட்டுவிட்டது. அன்றிலிருந்து அந்த மாணவியிடம் கேள்வி கேட்பதே இல்லை. நீதானே கல்யாணத்துக்கு ரெடி உன்னைக் கேட்டு என்ன பிரயோசனம் என்பார். ஆனால் அந்த மாணவியோ எங்களுடன் பல்கலைக்கழகம் வந்து ஐந்தாறு வருடத்தின் பின்பே திருமணம் செய்தார்.


உயர்தரம் படிக்கும் போது ஒரே வகுப்பில் சாந்தகௌரி, தயாகௌரி, ஜெயகௌரி, கௌரி என நான்கு கௌரிகள் கற்றோம். ஆசிரியைகளுக்கு ஒரே குழப்பம். ஒரு ஆள் செய்யும் பிழைக்கு மற்ற ஆளுக்கு பேச்சு விழும். எங்களுக்கு கொண்டாட்டம்தான். பாடசாலைக் கல்வியில் கடைசி வருடம் என்பதாலோ என்னவோ உயர்தர வகுப்பு மிக மிக சந்தோசமாகக் கழிந்தது. பாடசாலையின் கடைசி நாள் அன்றுதான் எங்களுக்கு பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்காக படிப்பு விடுமுறை வழங்கப்பட்ட நாள், இராமநாதன் மிஸ் எல்லோரையும் காரியாலயத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அங்கு சென்றோம். எங்களுக்கு பாடம் எடுத்த ஆசிரியைகள் எல்லோரும் கூடி நின்றார்கள். கடைசிநாள் கூட எங்களைக் கூட்டாகத் திட்டித்தான் அனுப்பப் போகிறார்கள் என்று பயந்து கொண்டு சென்றோம். அன்றுதான் தெரிந்தது அவர்கள் எங்கள் மேல் எவ்வளவு பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார்கள் என்று. அவர்கள் எங்களைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் கூறியதைக் கேட்டுப் பலருக்கு ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது. இந்தச் சம்பவம்தான் எங்கள் கலைப்பிரிவில் ஏழு மாணவிகள் பல்கலைக்கழகம் செல்ல உந்துகோலாக அமைந்தது எனலாம்.

நான் எனது ஆசிரியைத் தொழிலில் எமது பாடசாலையாகிய யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியையாக சேவையாற்ற வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அது நிறைவேறவில்லை. எத்தனை வருடங்கள் சென்றாலும் யாழ் இந்து மகளிர் கல்லூரியையும் ஆசிரியைகளையும் மாணவப் பருவத்தையும் மறக்கவே முடியாது. இவை “நீங்கா நினைவுகள்” என்றென்றும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அந்த இனிய நினைவுகளை கனடா இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கத்தினர் மூலமாக நடாத்தப்படும் நவராத்திரி விழா, வருடாந்த இராப்போசன விருந்து, கலைவிழா போன்ற நிகழ்ச்சிகள் மூலம் மீட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். எமது பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல நடுத்தோட்ட பிள்ளையார் அருள் புரிவாராக.

**திருமதி தயாகௌரி கணேசானந்தகுரு**

பழைய மாணவி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது கலாச்சாரமும் நம் பிள்ளைகளும்

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும், நாட்டு மக்களும், கலாச்சார, பாரம்பரிய பண்பாட்டு முறைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டே தம் வாழ்வியல் முறையை அமைத்துள்ளனர். விழுமிய முறைகளும், வரலாற்றுச் சூழலும் கூட வாழ்வியலை நிர்ணயிக்கிறது.

ஒரு நாட்டுக் கலாச்சாரப் பழக்கங்கள் போல் இன்னொரு நாட்டு கலாச்சாரம் இருக்காது. எடுத்துக் காட்டாக, இந்திய நாட்டுக் கலாச்சாரம், சமயம், பண்பாடு, நடை, உடை, உணவுப்பழக்க முறை, அமெரிக்க நாட்டுக்காரர்களைப் போல் இருக்காது. இந்தியா, பழமையில் ஊறியதும், சமயப்பற்றுடையதுமான கலாச்சாரம் கொண்ட நாடு. அமெரிக்காவின் கலாச்சாரம், பொருளாதாரத்தை மட்டும் மையமாகக் கொண்டது.

நம் தமிழ் கலாச்சாரம் மிகப் பண்படுத்தப்பட்ட தொன்று, மொழியானது, தொன்மை, தனித்தன்மை, பொதுப்பண்பு, பண்பாடு, கலை, இலக்கியவளம், உயரிய சிந்தனை ஆகியவற்றால் செம்மொழி (Classical) என்ற அந்தஸ்தைப் பெற்றது. தமிழ் மக்களின் பண்பாடானது. உணவு, உடை, வாழ்வியல், சமயச்சடங்குகள், விழாக்கள், கலை, இலக்கியங்கள் இவை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டதாகும்.

இப்பேற்பட்ட உயரிய சிறந்த நம் தமிழ் கலாச்சார, பண்பாட்டு முறைகளை பெற்றோராகிய நாம் சிதையவிடாமல் நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து வழிகாட்ட வேண்டும். நம் தாய்மொழி கற்றல் என்பது மற்றய விடயம். இது பிள்ளைகட்கு முக்கியமானதொன்று. ஏனென்றால் மொழியும் கலாச்சாரமும் ஒன்றையொன்று தழுவியவை. ஒன்றின்றி மற்றதில்லை. மூவாயிரம் ஆண்டுகட்கு முன் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் என்னும் இலக்கண, இலக்கிய நூல், தமிழ் மக்களின் பண்பாடு கலாச்சாரம், கல்வி, காதல் போன்ற வாழ்வியல் செய்திகளைக் கூறி, நம் வாழ்க்கைக்கு வழிகாட்டியுள்ளதை நாம் அறிவோம். வள்ளுவரின் திருக்குறளும் இவற்றையே இரு வரிகளில் கூறி, தமிழ் மக்களின் பண்பாடு, கலாச்சாரத்திற்கேற்ப, கற்பனை உலகின் விரிவு, கலை வாழ்வின் வளம், சுவை பொருந்திய கம்பராமாயணம் படைத்தார். இது மக்கள் வாழ்வை மேம்படுத்த வழிகாட்டுகிறது.

இவற்றையெல்லாம் அறிந்தும், படித்தும் அனுபவித்தும் வரும் பெற்றோராகிய நாம், நம் பிள்ளைகட்கு, சிறிது சிறிதாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மொழி கற்றல் மூலமாகவும் நாளாந்த வாழ்க்கைப் பயணம் ஊடாகவும், நம் விலை மதிப்பில்லாத கலாச்சாரம் பண்பாட்டு முறைகளைப் போதிக்கலாம்.

புலம் பெயர்ந்து வாழும் நாம், எம் பொன்னான கலாச்சார பாரம்பரிய வாழ்வியல் முறைகளை நழுவவிடாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடையதே. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பல்கலாச்சார நாடாகிய கனடா ஒவ்வொரு இனத்தவரின், கலாச்சாரம், பண்பாட்டு முறைகளைப் பேணவும் தத்தம் தாய்மொழியைக் கற்கவும் போதியளவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரவரின் விழாக்கள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டாட வழி செய்கிறது. இப்போது நாம் இக்காலச் சந்ததியினருக்குக் கற்பித்து வைத்தால் தான், அவர்கட்குப் பின் வரும் தம் சந்ததியினரைக் கவனிப்பர்.

தமிழ்மொழி கற்பித்தல் மூலம் ஔவையாரின் நல்வழி, கொன்றை வேந்தன், மூதுரை ஆகியவற்றில் சிறிதளவேனும் கற்பித்து வருவது மிகமிகப் பயன்தரக் கூடியது. ரொறன்ரோ கல்விச்சபையின் கீழ் நடக்கும் தமிழ்வகுப்புகளில் தமிழ் கற்கும் மாணவர்கள், ஔவையாரின் "ஆத்திசூடி; முழுவதும் தெரியாதவர்கள் மிகமிகக் குறைவே.

நாம் பிள்ளைகட்கு நம் வாழ்வியல் விழுமியங் களைத் தாரைவார்த்துக் கொடுக்க வேண்டும். பெரியோரை மதித்தல், பெற்றோரை வணங்கல், பிறருக்குதவுதல், கல்வியைக் கருத்திற் கொளல் போன்றவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், வீட்டில் தமிழில் உரையாடல், சடங்குகள், பாரம்பரிய முறைகளைச் சொல்லிக் கொடுத்தல், பங்குபற்ற வைத்தல், இயல், இசைப் பயிற்சிகளில் ஈடுபட வைத்தல், கலாச்சார நிகழ்வுகளைப் பார்க்கவும், அதில் பங்கு பெறவும் ஊக்குவித்தல் போன்ற நம் வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொடுத்து நம் செம்மொழியாகிய தமிழ் மொழியையும் கற்க வைத்து, நம் கலாச்சாரத்தை வலுவிழக்கவிடாமல் பாதுகாக்க முடியும். தற்போதைய சந்ததியினருக்கு நாம் இதைச் சொல்லிக் கொடுக்கிறோம். இப்பிள்ளைகள் தமக்குப் பின்வரும் சந்ததியினருக்கு இவற்றைக் கொண்டு செல்ல வைக்க வேண்டும்.

எமது மொழி, கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமயச் சடங்குகள், இவற்றைக் கற்பித்த எம் பாடசாலையாகிய யாழ். இந்து மகளிர் கல்லூரியில் படித்த மாணவராகிய நாம், இப்போ தாய்மார், பாட்டிமாராக இருந்து, எம் வருங்காலப் பிள்ளைகளை வழிநடத்துவோம். யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம் கனடாக் கிளை கொண்டாடும் வெள்ளி விழா சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன்.

**திருமதி. சாரதா குமாரசாமி MA**

பழைய மாணவி













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனியில் பதிந்த பாதச் சுவடுகள்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் கனடாக் கிளை தங்கள் 25ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக, வெள்ளிவிழா மலருக்கு ஒரு கட்டுரை தந்து உதவ முடியுமா என வேண்டுகோள் விடுத்தனர். உடனடியாகவே நான் அதற்கு எனது மனப்பூர்வமான சம்மதத்தைத் தெரிவித்தேன். ஏனெனில் இக்கல்லூரியின் பழைய மாணவியாக நான் இல்லாவிட்டாலும் இச் சங்கம் உருவாகிய முதல் நாளிலிருந்து 25 வருடகாலமாக இவர்களோடு பயணம் செய்தவர்களில் நானும் ஒருவர் என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

செல்வி நல்லம்மா குழந்தைவேலு பெப்ரவரி 1991ல் கனடா வந்து இறங்கினார். 1983 இனக்கலவரத்தின் காரணமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்த நான் 3 வருடகாலம் புவிஇயல் ஆசிரியையாக இந்து மகளிர் கல்லூரியில் தொழில் புரியும் பாக்கியத்தைப் பெற்றேன். நான் கல்வி கற்றது பின் ஆரம்ப காலத்தில் ஆசிரியையாகப் பணிபுரிந்தது எல்லாமே வேம்படி மகளிர் கல்லூரியில் தான். சுருங்கச் சொல்லப் போனால் வேம்படி எனக்கு இரண்டாவது தாயாகும். இதனால் இந்து மகளிர் கல்லூரிக்கு மிகவும் தயக்கத்துடன்தான் சென்றேன். ஆனால் அந்த 3 வருடகால ஆசிரியப் பணி எனது தொழில் வாழ்க்கையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமாகவே அமைந்தது. அந்தக் காலகட்டத்தில் எனக்குக் கிடைத்த ஒரு பெரும் புதையலே நல்லம்மா குழந்தைவேலுவின் நட்பாகும். ஆகவே அவவின் வரவை மிகவும் ஆவலோடும், மகிழ்ச்சியோடும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன். இங்கு வந்தவுடன் இங்குள்ள ஆசிரியத் தொழில் வாய்ப்புகளைப் பற்றித்தான் அவ என்னிடம் கேட்கக் கூடும் என எண்ணி அதற்கான தகவல்களைச் சேகரித்து வைத்திருந்தேன். ஆனால் அவ என்னிடம் முதலில் விசாரித்தது "எப்படி இந்து மகளிர் கல்லூரிக்கு இங்கு ஒரு பழைய மாணவிகள் சங்கம் அமைக்கலாம்" என்பதேயாகும். இது நான் சிறிதும் எதிர்பார்க்காத ஒரு கேள்வி. ஆனாலும் தனிக்கட்டைதானே, அதனால்தான் இப்படிச் சிந்திக்கிறா என நினைத்துக் கொண்டேன். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவவின் உடல், பொருள், ஆவி எல்லாமே இச் சங்கம்தான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

செப்டெம்பர் 1992ல் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் முதல் ஆண்டுக் கூட்டம் இங்கு நடைபெற்றமை இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. அக்காலகட்டத்தில் இன்று இருப்பது போல் மண்டபங்களோ, பெரிய வீடுகளோ எம்மவர்கள் வசம் இருக்கவில்லை. லான்ஸ்டவுன் என்னும் இடத்தில் தமிழர் கூட்டுறவு இல்லத்திற்கு $50 கட்டணமாகச் செலுத்தி அம் மண்டபத்தை நல்லம்மா எடுப்பதற்கு அங்கு வசித்து வந்த நான் உதவினேன். தமிழர் கூட்டுறவு இல்லத்தில்தான் இச் சங்கத்திற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது. ஒரு சுபமுகூர்த்த நேரத்தில் இவ் அங்குரார்ப்பணம் நடந்திருக்க வேண்டும். ஏனெனில் இச் சங்கம் மிக வேகமான வளர்ச்சியையே கண்டது. சரஸ்வதி பூசைகள், கலைவிழாக்கள், படக்காட்சிகள், வருடாந்த விருந்து வைபவங்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்களின் வெற்றிப் படிகளை இங்கு மாத்திரமல்லாது தாய் நாட்டிலும் அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார்கள், செய்கிறார்கள். 25 ஆண்டுகள் கழிந்து விட்டன. இக் கால் நூற்றாண்டு கால சாதனைகள் மெச்சப்பட வேண்டியன. இவர்கள் நடந்து வந்த பாதையை பார்க்கும் பொழுது எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

25 வருடங்களுக்கு முன்பு, அதாவது ஆரம்ப காலத்தில் இக் கூட்டங்களை நடாத்திய மாணவிகள் ஒரு 20, 25 வயதினராகவே இருந்தனர். இன்று இவர்கள் தமது வாழ்க்கையிலும் பெரு வளர்ச்சி பெற்றுள்ளனர். கணவர், பிள்ளைகள், வீடு, வாகனம், தொழில் என பலவற்றில் சிறப்புடன் விளங்குகிறார்கள். இவர்களின் நடை, உடை, பாவனை, நிர்வாகத் திறன் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சுய வளர்ச்சியை எடுத்து இயம்புகின்றன. இத் துரித வளர்ச்சி சங்கத்தின் வளர்ச்சியிலும் பிரதிபலிப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இச் சங்கத்தின் வருடாந்த இரவு விருந்து வைபவங்களை பெரும்பாலும் நான் தவறவிடுவதில்லை. ஒவ்வொரு வருடமும் அதன் தரம் வளர்ந்து கொண்டே போகிறது. இங்கு நடைபெறும் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக் கிடையிலான வலைப் பந்தாட்டம் முதலிய விளையாட்டுப் போட்டிகளில் கூட இவர்கள் சோடை போகவில்லை. இவர்கள் தாம் எடுத்துக் கொண்ட எல்லாக் காரியங்களையும் சீரும் சிறப்பாகவும், கச்சிதமாகவும், அதே நேரத்தில் பணிவோடும், பண்போடும் செய்து முடிப்பதைப் பார்க்கும் பொழுது இங்குள்ள ஆசிரியர்கள் பெருமையும், உவகையும் அடைகிறார்கள்.

இன்று கனடாவில் எத்தனையோ பழைய மாணவ, மாணவிகள் சங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் யாழ் இந்து மகளிர் கல்லூரிக் கனடாக் கிளை பழைய மாணவிகள் சங்கம் தலை சிறந்த சங்கங்களில் ஒன்றாக விளங்குகிறது என ஆணித்தரமாக கூறலாம். இச் சங்கம் மேன்மேலும் தளைத்தோங்கவேண்டும் என வாழ்த்துகிறேன். இவர்களின் 25 வருடகால கடின உழைப்புக்கும், சாதனைகளுக்கும் தலை வணங்குகிறேன்.

**திருமதி.கனகேஸ்வரி நடராசா**
யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை
இளைப்பாறிய TDSB ஆசிரியை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Time to Reminisce

**Mrs Thilagawathy Yoganathan**

Completing twenty five years is a significant landmark in the history of any organisation. It needs celebration and celebration time is a reminiscing time – a time to dwell on the past and plan for the future, a time to document events for future needs.

It is great news that the Canada Branch of the Old Girls' Association of Jaffna Hindu Ladies' College is celebrating its Silver Jubilee this year in October and that a journal is being published to mark the occasion. As a very senior member of Jaffna Hindu Ladies' College community – student, head prefect, old girl, staff member, parent, well-wisher and president of the Old Girls' Association on a number of occasions, I wish to share some of my thoughts and sentiments through the pages of the proposed journal.

I can still vividly recall the efforts made by a Great Visionary late Mrs Visaladchy Sivagurunathar to establish a school in Jaffna Town for Hindu girls so that they could be educated and brought up in the traditional Hindu way of life. There was good response from the civil community

for the idea. The Board of Directors Jaffna Hindu College and Affiliated Schools, (on which my father late Mr A Arulambalam served as Honorary Secretary) joined hands with the Great Visionary in her Mission to establish such a school. The Mission was a success and Jaffna Hindu Ladies College was formally proclaimed. The College came under the Management of the Jaffna Hindu College Directorate and was looked upon as a Sister Institution to Jaffna Hindu College.

Prior to the establishment of the girls' school, Jaffna Hindu College was a co-educational school. All girls attending Jaffna Hindu were transferred to the Girls' school once it started functioning. To start with the school was housed in temporary accommodations. There were very limited facilities – The class rooms were cadjan sheds. The school morning assembly was conducted in the open courtyard.

Mrs Visaladchy Sivagurunathar magnanimously donated a vast extent of land at Arasady Road to put up permanent buildings for the newly created school. With the school's future expansion in view adjoining lands were purchased at very nominal prices by the Board and added to the donated land. After adequate buildings were put up Hindu Ladies' College was ceremoniously shifted to its present permanent site in 1943. The gracious lady Mrs Sivagurunathar was venerated as the Founder of Hindu Ladies College, years later a Hall was built in her memory and named after her.

In the formative years of the school there was a dearth of qualified women to be appointed as Principal. So Principals were recruited from India. One such recruit Mrs Sarojini Rao was an outstanding principal. She with her team of dedicated staff laid the foundations for the future greatness of the school. It was during her time a Carnival and Rally was jointly organised by the Board and school to raise money to construct the boundary wall of the school.

I had my entire education up to my A Levels (it was Higher School Certificate at that time) and entered the University of Peradeniya. After graduating I joined the staff at my old school


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

teaching mainly History to A Level students. My teaching career was very short – it was only for three years from mid 1957 – mid 1960 and ending on my marriage to Dr V Yoganathan. Many years later after taking up residence at Brown Road Jaffna, I was happy to meet many of my students at old girls gatherings and was genuinely pleased to see them doing well in life. Some were holding very high positions in their chosen fields of carrier.

My two daughters Arulmolee and Gnanamoly studied at Hindu Ladies' and graduated from the University of Jaffna obtaining First Class Honours. They had the good fortune to go to Foreign Universities to pursue with their Post Graduate Studies and obtain PhDs. Like my daughters there were many others from Hindu Ladies who excelled in their studies, became professionals & stood distinguished.

The academic distinctions achieved by the students of H.L.C bear testimony to the good foundations that were laid at the school in the early years of their education and the high standards that were maintained. I also wish to endorse the view of many that the School's Golden Era was the period of Miss P Ramanathan's Principal-ship.

A school's prestige and reputation lies in the success and achievements of its old students. It is they who bring a name and fame to their school. Old Students Associations are the supporting pillars of their schools' expansion projects. Hindu Ladies College, Jaffna can be proud of its five supporting pillars. They are the parent Body in Jaffna and the branches in Colombo, Canada, UK and Australia. They have been very supportive of their old school in many ways. The School's Golden Jubilee in 1993, was a three day spectacular event and was observed by the branches too in a big way.

As past president of the OGA, I am aware of the incredible sums of money the Canada and Australian branches raised to fund the school's development projects. I am now made to understand that all five Old Girls' Associations are jointly funding the three storey complex that is currently being constructed to house more class rooms.

Before I conclude I would like to urge the Canada Branch to undertake a new venture. I know that they have the potential to do it. Our part of the country suffered unprecedented loss of life and livelihood during the Ethnic War. Men, women and children have lost their limbs and become disabled. As an honorary disability support worker, a past Director and Chairman of a Disability Support Project, I have met many disabled and limbless children in need of financial support for their educational needs. Cannot Canada Branch undertake to help these children through some appropriate body? If provision to finance any other cause apart from that of their old schools' is not in their existing Constitution and By-Laws it is now time to amend it. The suggested new venture will enhance the image of the Association in the public eye. It is my suggestion. It is up to the Canada Branch to implement it or not. No hard feelings.

With My Best Wishes, Congratulations and Blessings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நினைவுகளுடன் உறுதி கொள்வோம்

கனவுகளையும் நினைவுகளையும் கரையில் கரைத்துவிட்டு
கண்ணீரை மட்டுமே எமதாக்கிக் கொண்டு
புலம் பெயர்ந்த மண்ணில் புன்னகை மலரவிட்டு
வாழும் என் அன்புத் தோழிகளே....

காலம் பல கடந்தாலும் தொலை தூரம் வந்தாலும்
கனவுகளும் நினைவுகளும் எம்மை விட்டு விலகாது
கோடி பல கொடுத்தாலும் ஓடிப்போன காலம் கூடி வருமா?
கோடி பல கொடுத்தாலும் ஓடிப்போன காலம் கூடி வருமா?

இரட்டைச்சடை கட்டி வெள்ளைச்சட்டை போட்டு
துள்ளிக் குதித்து வலம் வந்த நாம் ....
நம் மண்ணில் வாழ்ந்த காலம் ஒரு வரப்பிரசாதம்
வரம் கேட்டாலும் இனி வருமா அப்படி ஒரு காலம்?

துண்டு மாங்காய் கொண்டு வருவாள் சுதா
கூடவே உப்பும் தூளும் தொட்டுத் தருவாள் சோபனா
கள்ள மாங்காய் சாப்பிட்டதை கண்டும் காணாதது போல்
மெல்ல கடந்து செல்வார் மிஸ் குழந்தைவேலு

ஊர்வலம் உண்ணாவிரதம் என பற்பல இடர்பாடுகள் இருந்தும்
கலை, கலாசாரம், பண்பாடு யாவற்றையும்
எம் கல்லூரி கற்றுத் தந்ததினால்
பலர் வியக்க இன்று தனித்துவமாய் மிளிர்கின்றோம்

எத்தனை குறும்புகள் எத்தனை வம்புகள்
பள்ளியறையில் படித்த அந்த பொற்காலம்
இனி வருமா அப்படி ஒரு எதிர்காலம்? என
கூடி நாம் ஏங்கி இன்று 25 வருடங்கள்

புதையுண்டது நம் உறவுகள் மட்டுமல்ல நம் ஆசைகளும் கூட
புலம் பெயர்ந்து வந்த நாம் கூடியே உயர்த்திடுவோம்
எம் யாழ் இந்து மகளிர் கல்லூரியை!

அன்புடன்
**வாசுகி ஜெயந்திரன்**



## யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கனடா

### சங்க நிர்வாக உறுப்பினர்கள் 2015-2017

**போஷகர்:**
செல்வி. நல்லம்மா குழந்தைவேலு

**ஆலோசகர்கள்:**
திருமதி. ராஜேஸ் சண்முகம்,
திருமதி. சரஸ் ஞானசம்பந்தன்,
திருமதி. ஜெயதேவி சிவகுருநாதன்

**தலைவர்:**
திருமதி. தேவகி முனீஸ்வரராஜா

**உபதலைவர்:**
திருமதி. ஜெயகௌரி மகிந்தன்

**செயலாளர்:**
திருமதி. வாசுகி ஜெயேந்திரன்

**உபசெயலாளர்:**
திருமதி. தர்மினி சிவசோதி

**தனாதிகாரி:**
திருமதி. திருநங்கை ஞானசபேசன்

**உபதனாதிகாரி:**
திருமதி. சுகந்தினி பிரபாகரன்

**மலராசிரியர்:**
திருமதி. நீலா நகுலேசபிள்ளை

**நிர்வாக உறுப்பினர்கள்**
திருமதி. தனுஜுஷா ரொமேஸ்
திருமதி. சிவகௌரி புவிதாஸன்
திருமதி. கௌரி சிவகுமார்
திருமதி. கவிதா செந்தில்முருகன்
திருமதி. திருமகள் உமாசங்கர்
திருமதி. சூரியகுமாரி ரவி
திருமதி. பரிமளா ஜெகன்ராஜ்
திருமதி. சிவகலா கணபதிப்பிள்ளை
திருமதி. பவதாரணி கலியுகராஜா
திருமதி. ஜெயந்தி நாகேஸ்வரன்

**விளையாட்டுப் பொறுப்பாளர்**
திருமதி. சித்ரா கருணானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தைந்து ஆண்டுகள்!!

இருபத்தைந்து ஆண்டுகள் உருண்டோடிவிட்டன, யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம் கனடாவில் உருவாகி. ஆச்சரியம்! மட்டற்ற மகிழ்ச்சி. எங்கள் சங்கம் ஒக்டோபர் திங்கள் 15, 2016 இல் வெள்ளிவிழா கொண்டாடும் வேளையில் அதன் ஆரம்பம், வளர்ச்சி பற்றி நினைவு கூருவதில் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

நான் கனடாவுக்கு புலம் பெயரும் பொழுது, என் கல்லூரி ஆசிரிய மன்றத்தால் எனக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது. அவ்வேளை எனது மதிப்புக்குரிய ஆசிரியை ராஜேஸ் சண்முகமும், சக ஆசிரியை மகேஸ்வரி பரமநாதனும் கனடாவில் பழைய மாணவிகள் சங்கம் அமைத்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவவேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். அவர்களின் வேண்டுகோளினால் திகிலடைந்த போதும், அதனை நிறைவேற்றுவேன் என உறுதியளித்தேன்.

கனடாவுக்கு பெப்ரவரி 1991இல் புலம் பெயர்ந்தேன். யாழ் இந்து மகளிர் கல்லூரியில் எனது சக ஆசிரியையாகவும், உற்ற நண்பியுமான கனகேஸ்வரி நடராசாவை கனடாவில் என் வேலை வாய்ப்புக்கள் பற்றி அறியச் சந்தித்தேன். அப்பொழுது அவரிடம் எனக்கு என் கல்லூரியினால் கொடுக்கப்பட்ட பணியைப் பற்றிக் கூறி சங்கம் அமைப்பதற்கான ஆலோசனையையும், உதவியையும் பெற்றேன். மனத்திடத்துடன் செயலில் இறங்கினேன்.

கனடாவில் எனது அயலில் வாழ்ந்த எங்கள் கல்லூரியின் மூத்த மாணவியான தெய்வநாயகி சிவசோதியுடன் தொடர்பு கொண்டேன். அவர் எனது முயற்சிக்கு தனது பூரண ஒத்துழைப்பைத் தர முன்வந்தார். எங்கள் கல்லூரியின் பழைய மாணவிகளாகிய ஊர்மிளா சிவசோதி, கௌசல்யா சிவசோதி இங்குள்ள பழைய மாணவிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்த உற்சாகத்துடன் உதவினர்.

1991ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி, Lansdowne கூட்டுறவு நூல் நிலையத்தில் கனகேஸ்வரி நடராசாவின் உதவியுடன் கூட்டம் நடாத்துவதற்கு இடமெடுத்தேன். தெய்வநாயகி சிவசோதி, சதாமதி அருந்தவசண்முகநாதன், ஊர்மிளா சிவசோதி, பாலவிஜி பாலசிங்கம் ஆசிரியைகளான விமலா விஜயகுமார், ராஜி கதிர்காமர் ஆகியோருடன் இணைந்து சங்கத்தை ஆரம்பித்தேன். செய்தி பரவியது. பல பழைய மாணவிகள் சங்கத்தில் இணைந்தனர். அங்கத்தவர்களை இணைப்பதில் சந்திரிகா சிவகுமார், தேவகி முனீஸ்வராஜா, பத்மா சங்கர், சுரனுதா ராஜரத்தினம், ஊர்மிளா சிவசோதி ஆகியவர்கள் காட்டிய ஆர்வம் அளப்பரியது. தாம் சென்ற இடமெல்லாம் பழைய மாணவிகளைக் கண்டுபிடிப்பதிலும் தொலைபேசி இலக்கங்களைப் பெற்றுத் தருவதிலும் ஆர்வமாகச் செயலாற்றினர். சங்கம் வலுப்பெற்றது.

சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா, செப்ரெம்பர் 27, 1992இல் Lansdowne கூட்டுறவு இல்ல மண்டபத்தை எனது பணம் 50 டொலரில் எடுத்து மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல இளம் மாணவிகள் (20 – 30 வயதினர்) புதிய சூழலிலும், தம் கல்லூரித் தாயை மறவாது எனது அழைப்புக்கு மதிப்பளித்து வருகை தந்தனர். அவர்கள் விழா சிறப்பாக நடைபெற வேண்டிய சகல உதவிகளையும் தாமாகவே முன்னின்று மகிழ்ச்சியுடன் செயலாற்றியது இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கின்றது. திருமதி தெய்வநாயகி சிவசோதி அன்று தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து ஒன்று கூடல் தவறாது ஆண்டு தோறும் இடம்பெற்று வருகின்றது.

எங்கள் கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியையும் ரொன்ரோ கல்விச்சபை ஆலோசகருமான DR. நல்லம்மா சேனாதிராஜா 1993 இல் தலைவரானார். இவரின் தலைமையில் எங்கள் கல்லூரியின் பொன்விழா கலைநிகழ்ச்சிகள், நாடகத்துடன் கொண்டாடப்பட்டு நிதி சேகரித்து கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. எங்கள் சங்கம் யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு வெளிநாட்டில் உருவாகிய முதல் சங்கம் என்ற பெருமையைப் பெற்றது.

திருமதி பரமேஸ்வரி பரமநாதன் தலைமையில் 1997 இல் முதன் முதலாக படக்காட்சி ஆரம்பிக்கப்பட்டு சங்கத்திற்கு நிதி சேகரிக்கப்பட்டது. இது தொடர்ந்தும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எங்கள் பழைய மாணவிகளின் கலைத்திறன்களை வெளிக்கொணர சிறந்த கலை நிகழ்ச்சி நடாத்த போதிய ஆட்பலமும், தலைமைத்துவமும் இல்லையே என ஏங்கி நின்றோம். அவ்வேளை எங்கள் கல்லூரியின் பழைய மாணவியும் நீண்ட கால ஆசிரியையுமான அமரர் திருமதி. ஞானேஸ்வரி சொக்கலிங்கம் 1997 இல் கனடா வருகைதந்தமை எமக்குத் தென்பு ஊட்டியது, அவரின் தலைமையில் ஆசிரியை நேசமலர் வேலாயுதபிள்ளை யினால் சங்கத்திற்கான யாப்பு எழுதப்பட்டு, சங்கம் பதிவு செய்யப்பட்டது. அவரைத் தொடர்ந்து எங்கள் கல்லூரிப் பழைய மாணவி, ஆசிரியை, பிரதி அதிபரான ராஜேஸ்வரி சண்முகம் வருகை தந்தார். இவரின் தலைமையில் சக்தி 2000 என்ற கலைநிகழ்ச்சியும், ஞானேஸ்வரி சொக்கலிங்கத்தினால் "சக்தி 2000" மலர் வெளியீடும் முதன் முறையாக இடம்பெற்றன. பழைய மாணவிகளினதும் அவர்கள் பிள்ளைகளினதும் இயல், இசை, நாடகத்துறையிலுள்ள திறமைகள் பலரின் பாராட்டைப்பெற்றது. சங்கம் சாதனை படைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவியும் ஆசிரியையுமான சரஸ் ஞானசம்பந்தன் தலைமையில் கல்லூரியின் மணிவிழா சக்தி 2003 என்ற கலைநிகழ்ச்சியுடனும், "சக்தி 2003" மலர் வெளியீட்டுடனும் இங்கு கொண்டாடப்பட்டது. ஆசிரியை திருமதி. நீலா நகுலேசபிள்ளையின் தலைமையில் சக்தி 2010 என்ற கலைநிகழ்ச்சி மூலம் நிதி திரட்டி கல்லூரிக்கு தரமான கணினிக் கூடம் கொடுக்கப்பட்டது. திருமதி. ராஜினி தனநிருபசிங்கத்தின் தலைமையில் 2011 இல் முதன் முறையாக இராப்போசன விருந்து இடம்பெற்றது. இதனை வருடா வருடம் சிறப்பாக நடாத்துவதில் எம் இளைய சங்க உறுப்பினர்களிடம் காணப்படும் ஆற்றல், ஆர்வம், உற்சாகம் போற்றற்குரியது.

எங்கள் சங்கம் JSSA, TSSA கழகங்களினால் நடாத்தப்படுகின்ற வலைப்பந்தாட்டத்திலும் ஏனைய விளையாட்டுக்களிலும் பங்குபற்றி தனது முத்திரையைப் பதித்து கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றது. விளையாட்டுத்துறையில் பல சவால்களின் மத்தியிலும் தங்கள் நேரத்தை ஒதுக்கி அயராது உழைத்து வந்த, வருகின்ற ஊர்மிளா நவநீதன், பத்மா சங்கர், சித்திரா கருணானந்தன், கௌசி சிவகுமார், கலாஜினி பிரேம்குமார், காயத்திரி சிவகுமார், வைதேகி ரா ஆகியவர்களும், அவர்களுக்கு ஆதரவு நல்கும் பரமேஸ்வரி செல்வராசாவும் பாராட்டுக்குரியவர்கள்

எம் கல்லூரியின் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு அதன் தேவையை அறிந்து 25 ஆண்டுகளாக காலத்துக்கு காலம் பல உதவிகயைச் செய்து வருகின்றது. அவற்றில் பொன்விழா நிதியம், கல்லூரியின் ஆலய புனருத்தாரணம், பிரதிபதிக்கும் யந்திரம் (photo copier Machine) கோவில் ஐயருக்கான சம்பள உதவி, 150 கதிரை மேசைகள், கணினிக் கூடம் என்பன குறிப்பிடத்தக்கவை. சுனாமி அனர்த்தத்திற்கும் IMHO ஸ்தாபனத்திற்கும் உதவிகள் அளிக்கப்பட்டன.

புலம் பெயர்ந்து வாழும் எங்கள் அங்கத்தவர்கள், எங்கள் கலை, சமய கலாசாரப் பண்புகளை தங்கள் சந்ததியினருக்கு வழங்க வேண்டுமென வாணி விழாவினை சிறப்பாக வருடாந்த ஒன்றுகூடலுடன் கொண்டாடுவார்கள். கலை நிகழ்ச்சிகளில் எங்கள் இளம் சந்ததியினருக்கு முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்கப்படுகின்றனர். எங்கள் சங்கம் பல்வேறு கால பழைய மாணவிகள் ஆசிரியைகளை ஒன்றுகூடல் மூலம் ஒன்று திரட்டி அவர்களிடையே நல்ல ஆரோக்கியமான உறவை ஏற்படுத்தி, அவர்களின் மகிழ்ச்சிகரமான கல்லூரி நினைவுகளை மீட்பதில் நல்ல வாய்ப்பைக் கொடுக்கின்றது. மேலும் நல்ல கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், உடையலங்காரங்களை வழங்கி சங்கத்தினர் நல்ல முத்திரையை இங்கு பதித்துள்ளது பெருமைக்குரியது.

சங்கம் ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை மிக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய சகல தலைவர்கள், நிர்வாகக் குழுவினரின் ஒத்துழைப்பே சங்கத்தின் இன்றைய சிறப்பான வளர்ச்சிக்கு காரணம் என்பது மிகையாகா.

எனது கல்லூரியின் பழைய மாணவியும், ஆசிரியையுமான எனக்கு இங்கு சங்கத்தை ஆரம்பித்து அதன் போசகராக வழி நடத்த கிடைத்த வாய்ப்பு என் பாக்கியமே. தங்கள் ஒத்துழைப்பை எனக்கு நல்கி அர்ப்பணிப்புடன் உதவி வருகின்ற சங்க உறுப்பினர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

இருபத்தைந்தாவது ஆண்டுகள் இனிதே நிறைவ பெற்றன. அதன் நிறைவுக்காக விழா எடுத்து கல்லூரிக்கான மூன்று மாடிக்கட்டத்தைக் கட்ட நிதி திரட்ட பல சவால்களின் மத்தியிலும் அரும் பணிபுரியும் சகல அங்கத்தவர்கள், இவ்வாண்டுத் தலைவர், நிர்வாகக் குழுவினருக்கும் இறைவன் அருளை வேண்டி இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். எங்கள் சங்கம் ஒளிமயமான எதிர்காலத்தைக் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

வளர்க எங்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம்.

"எங்களின் முயற்சி கல்லூரியின் உயர்ச்சி"

**செல்வி. நல்லம்மா குழந்தைவேலு**

பழைய மாணவி, ஆசிரியை

ஸ்தாபகர், போசகர்

யாழ் இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம்

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றல்ல என்பதற்கமைய

# நன்றி நவில்கின்றோம்

- 2016ம் ஆண்டு இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கக் கனடாக் கிளை நடாத்தும் தனது வெள்ளிவிழாக் கலைநிகழ்வையும் மலர்வெளியீட்டினையும் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் அனைத்து நல் நெஞ்சங்களுக்கும்,
- எமது அழைப்பை ஏற்று விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம விருந்தினர் டாக்டர் ஜெயசக்தி தயாபரன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர் டாக்டர் யசோ தர்மரத்தினம் அவர்களுக்கும்,
- ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் வழங்கி மலரைச் சிறப்பித்த பெருந்தகைகளுக்கும்,
- கட்டுரைகள், கவிதைகள், வரலாற்று நிகழ்வுகளை வடித்துத் தந்த முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவிகளுக்கும்,
- கலைவிழா சிறப்புற அமைய நடன, நாடக, இசை, வாத்திய இசை, திரை இசை, உடை அலங்காரம் ஆகிய பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தித் தந்துதவிய ஆசிரியர்கள், பழைய மாணவிகள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவருக்கும்
- பாடசாலைக்கான மூன்று மாடிக் கட்டட நிதி உதவிக்காக நாமெடுக்கும் கலைவிழாவும் மலர்வெளியீடும் சிறப்புற நடைபெற விளம்பரங்களைத் தந்து தம் அனுசரணைகளை வழங்கிய பழைய மாணவிகள், வர்த்தகப் பெருமக்கள், சமூக நலன் விரும்பிகளின் கருணை உள்ளங்களுக்கும்,
- மலர் சிறப்பாக அமைய உழைத்த மலர்க்குழுவினர்க்கும், அயராது உழைத்த திருமதி திருநங்கை சபேசனுக்கும்,
- வெள்ளிவிழா மலரை அழகுற வடிவமைத்த பதிப்பகத்தினர் "மொனரா" ( Monara ) ஸ்தாபனத்தாருக்கும்,
- இவ்விழா திறம்பட நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நிர்வாகக் குழுவினர், உறுப்பினர்களுக்கும்,
- மேலும் பல வழிகளிலும் எமக்குத் தேவையான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை நவில்கின்றோம். உழைப்பு, உதவி மலையளவேயாயினும் சரி, கடுகளவேயாயினும் சரி நன்றி செலுத்துவது நமது பண்பு என்பதனையே வள்ளுவப் பெருந்தகை,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" எனக் கூறியுள்ளமையை மனங்கொள்ளவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes to JHL OGA*
*& School Building Project*
*from*


**Dr. Ratnasingham Mohan**

**Family Dentist**

3033 Palstan Rd, Ste. 206
Mississauga, ON  L4Y 4E7
**Tel: 905-949-5656**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Wishes to JHL OGA



**FOR ALL YOUR REAL ESTATE NEEDS!**
**"CALL YOUR REALTOR FOR LIFE!"**
**FREE HOME EVALUATION / FREE CONSULTATION**
**"TRUSTED SERVICE, PROVEN RESULTS!"**




## Jeseetha Jeganathan
Broker

**CELL : 416.566.0337**
BUSS : 416.742.8000 FAX : 416.742.8001
jeseehomes@gmail.com www.jeseehomes.com
1780 Albion Road # 2 & 3 Etobicoke ON M9V 1C1


*An Independent member broker,realtor,* Not intend to soilcit properties already listed for sale

Century 21
PEOPLE's CHOICE REALTY INC Brokerage*.
1780 Albion Road # 2 & 3 Etobicoke ON M9V 1C1
* Each offce independently Owned and operated

MLS MULTIPLE LISTING SERVICE® REALTOR®

**Platinum Award Winner: 2000-2015 Top Producer: 2012-2015 Centurion Award Winner: 2012-2015**

**Residential, Commercial & Investments**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

by monara graphic designing & printing 905 554 7844